மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

மின் மாற்றி

***298—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அம்பரீசபுரம் ஊராட்சி, அம்பரீசபுரத்தில் 200 KVA திறனுடைய கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் கோரும் அம்பரீசபுரம் எஸ்.எஸ்-லிருந்து அதிக அழுத்தம் காரணமாக, புதிய 100 KVA அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 16]

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்ந்த சிந்தனையால், அறிவார்ந்த செயலால், தீர்க்க தரிசனத்தால், திடமான முடிவால், எதிரிகளைக் கண்டு அஞ்சாமல், நியாயங்களை மட்டுமே தீர்ப்பாக எழுதும் தர்ம தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) மின்வெட்டு மாநிலமாக இருந்த தமிழகத்தை, மின்மிகை மாநிலமாக உருவாக்கி, கூடுதலாக 8,432.5 மெகாவாட் உற்பத்தி செய்து, மின்வெட்டு அறவே இல்லாத மாநிலமாக தமிழகத்தை ஒளி மிளிரச் செய்த, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அம்பரீசபுரம் ஊராட்சியிலே வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்ல சென்றபோது, கூடுதலாக மின்மாற்றி வேண்டுமெனக் கோரிக்கை வைத்தார்கள். உடனே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையிலே வினா தொடுத்து, அதற்கான விடை இந்த அவைக்கு வருவதற்கு முன்னே, அதிகாரிகளெல்லாம் அங்கே சென்று, இப்பொழுது மின்மாற்றி அமைக்கும் பணியை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிய, 10 கோடி தமிழ் மக்களின் உள்ளங்களில் மட்டுமல்ல; இல்லங்களிலும் குடிகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, அம்பரீசபுரம் கிராம மக்களின் சார்பிலே என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

அரக்கோணம் நகரத்திலுள்ள விண்டர்பேட்டை 33 KV *துணை மின் நிலையம் 1957 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மிகப் பழமையான ஒன்றாகும். அந்த துணை மின் நிலையத்திலிருந்துதான் அரக்கோணம் நகரத்திற்கும், ஆசியா கண்டத்திலே மிகப் பெரிய ஐஎன்.எஸ். ராஜாளி என்று சொல்லக்கூடிய இந்திய கப்பற் படைத் தளத்திற்கும் மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அந்த 33* KV *துணை மின் நிலையத்தை 110* KV *ஆகத் தரம் உயர்த்த வேண்டுமென மக்கள் நீண்ட காலமாகக் கோரி வருகின்றனர். அதற்கான காலி நிலமும் அதன் அருகிலேயே இருக்கிறது. கேட்டதை மட்டுமல்ல; கேட்காததையும் கொடுக்கிற, வாரி வாரி வழங்குகிற வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித ஆட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பழமையான 33* KV *துணை மின் நிலையத்தை, 110* KV *ஆக தரம் உயர்த்தித் தர முன்வருவாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற 33 KV-யில் மின் பளு எவ்வளவு இருக்கிறது என்பதை ஆராய்ந்து, 70 விழுக்காடுக்கு மேலாக இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, புதிதாக அமைப்பதற்குண்டான நடவடிக்கை நிதிநிலைமைக்கேற்ப எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 33 KV துணை மின் நிலையத்தை 110 KV ஆகத் தரமுயர்த்த பரிசீலிக்கப்படும் என்ற நல்ல பதிலை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், செம்பாக்கம், மேற்கு தாம்பரம் இப்படி பல்வேறுபட்ட பகுதியிலே துணை மின் நிலையங்கள், நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலக்கட்டத்தில் அமைக்கப்பட்டன. சிட்லப்பாக்கம் பகுதியில் 33 KV துணை மின் நிலையம் அமைக்கும் பணி அப்போது ஆரம்பிக்கப்பட்டு, இப்போது முடியும் தருவாயில் இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையம் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமானது. எனவே, அவசியம் கருதி எப்பொழுது அது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

2016 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்தப் பணிகள் முடிவடைந்ததும், உடனடியாக ஆய்வு செய்து, அதை நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் பகுதியிலே, பல்லாவரம் நகராட்சியிலே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ரூ.33 கோடியில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது. அதேபோன்று குரோம்பேட்டை பகுதியிலும் ரூ.11 கோடியில் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்தச் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக சில பகுதிகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பொழிச்சலூர் பகுதியிலும், அனகாபுத்தூர் நகராட்சியிலும் மின் அழுத்தக் குறைவு காரணமாக வீடுகளில் அவ்வப்பொழுது இடையூறு ஏற்படுகின்றது. ஆகவே, அந்தப் பகுதிகளில் மின்னழுத்தக் குறைவினை சரி செய்திட வேண்டும். அதேபோன்று, பல்லாவரம் நகராட்சியில் உள்ள அஸ்தினாபுரம் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றது. ஆகவே, இந்தப் பகுதிகளிலெல்லாம் அரசு கவனம் செலுத்தி, துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்து தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த 3 துணை மின் நிலையங்களிலும் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது*

என்று சொல்லியிருக்கிறார்கள். 3 துணை மின் நிலை மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஏதாவது ஒன்றில் இருக்கும் என்று சொன்னால், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 70 விழுக்காடு மின் பளு இருந்தாலே, உடனடியாக அதை ஆய்வு செய்து, அந்தத் துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்கும்பட்சத்தில், உடனடியாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், வாழும் மனித தெய்வம், மனித புனிதர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். உசிலம்பட்டி தொகுதியில் நகர்ப் பகுதியிலும், கிராமப் பகுதிகளிலும் மின் கம்பங்கள் நடு வீதியிலே இருப்பதால், மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது. அந்த மின் கம்பங்களெல்லாம் மக்களுடைய நலன் கருதி, மாற்றி அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் கம்பங்கள் நடுவிலே இருப்பதாகச் சொல்கின்ற பகுதி, ஊராட்சிப் பகுதியா, நகராட்சிப் பகுதியா என்பது தெரியவில்லை. நகராட்சிப் பகுதியாக இருந்தால், அங்குள்ள நகர்மன்றத்தில் அதற்கென ஒரு தீர்மானம் போட்டு அதற்குரிய செலவுத் தொகையைக் கட்டவேண்டும். ஊராட்சிப் பகுதியாக இருந்தாலும், அதுபோலத்தான் விதி இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உடனடியாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய எங்களுடைய குடும்பத் தலைவர், கழகத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நமக்கு நாமே நாயகன், கழகப் பொருளாளர், நம்முடைய பேரவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தளி சட்டமன்றத் தொகுதியில், என் வெற்றிக்காகப் பாடுபட்ட கழக முன்னோடிகளுக்கும், தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், அதேபோல், உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், இந்த அவையின் சார்பாக என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெட்டமுகிலாளம், அனுமந்தபுரம், சந்தனபள்ளி, இருதுகோட்டை, குந்துகோட்டை, சாலிவாரம், அந்தேவனபள்ளி ஆகிய பகுதிகளில் low voltage *காரணமாக, அங்குள்ள மக்களும், பள்ளி மாணவர்களும், விவசாயிகளும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே 43 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. அவர் சொல்கின்ற தளி பகுதியில் பல கிராமங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். பல கிராமங்களிலும் மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏதோ ஒரு மின்மாற்றியில் வேண்டுமானால்,*

மின் அழுத்தம் குறைவாக இருக்கலாமே தவிர, முழுமையாக அந்தப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படியிருப்பின், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதிகாரிகளை அங்கு அனுப்பி, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

மீன் பதனிடும் பூங்கா

***2681 திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குறும்பனையில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குறும்பனையில் மீன் பதனிடும் பூங்காங்கள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்தம் 42 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அதில் 15 பெரிய மீனவ கிராமங்கள் என்னுடைய தொகுதியில் உள்ளன. ஆழ்கடல் மீன் பிடிப்பதில் அங்குள்ள மீனவர்கள் திறமையானவர்கள். அங்கு, சுமார் 1,500-க்கும் அதிகமான விசைப் படகுகளும், சுமார் 4,000-க்கும்*